**ஜூலை – 05**

# தேசியச் செய்திகள்

## உள்துறை அமைச்சரின் சிறந்த செயல்பாட்டு பதக்கம்

- மத்திய உள்துறை அமைச்சகம் உள்துறை அமைச்சரின் சிறந்த செயல்பாட்டு பதக்கம் ஒன்றை நிறுவவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- மேலும் அது மூன்று பதக்கங்களை நிறுவியுள்ளது. அவை அந்தாரிக் சுரக்சா பதக்கம், அசாதாரன் ஆசுச்சன் பதக்கம் மற்றும் உத்கிரிசித் & அதி-உத்கிரிசித் சேவா பதக்கம்.
- உள்துறை அமைச்சரின் சிறந்த செயல்பாட்டு பதக்கம் மற்றும் அசதாரன் ஆசுச்சன் பதக்கம் ஆகியன ஒவ்வொரு வருடமும் சுதந்திர தினத்தன்று (ஆகஸ்ட் 15) வழங்கப்படும்.
- அந்தாரிக் சுரக்சா பதக்கம் மற்றும் உத்கிரிசித் & அதி-உத்கிரிசித் சேவா பதக்கம் ஆகியன குடியரசு தினம் (ஜனவரி, 26) அன்று அறிவிக்கப்படும்.
- உள்துறை அமைச்சரின் சிறந்த செயல்பாட்டு பதக்கம், அசாதாரன் ஆசுச்சன் பதக்கம் மற்றும் அந்தாரிக் சுரக்சா பதக்கங்கள் வழங்குவதற்கு எந்தவொரு எல்லை வரம்பு அல்லது ஒதுக்கீடு என்று எதுவும் இருக்காது.

## இந்தியாவின் முதல் உலகளாவிய இயக்க உச்சி மாநாடு

- ❖ வெவ்வேறு அமைச்சகம் மற்றும் தொழிற்சாலை கூட்டுனர்களுடன் சேர்ந்து நிதி ஆயோக், "இயக்கம் : உலகளாவிய இயக்க உச்சி மாநாடு" (MOVIE : Global Mobility Summit") என்ற ஒன்றை 2018-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவுள்ளது.
- ❖ இந்த உச்சி மாநாடு புதுதில்லியில் நடைபெறும். இது பிரதம மந்திரியால் தொடங்கி வைக்கப்படும்.
- ❖ இது வாகனங்களை மின்மயமாக்கல், புதுப்பிக்கத்தக்க ஆற்றலை ஒருங்கிணைத்தல் மற்றும் வேலை வாய்ப்பினை அதிகரித்தல் போன்ற இந்தியாவின் இலக்குகளை வழி நடத்த உதவும். இவ்வாறு தூய்மையான ஆற்றலைக் கொண்ட பொருளாதாரம் நோக்கிய இந்தியாவின் மாற்றத்தினை துரிதப்படுத்த முடியும்.

## கோல்டன் உலகப் பந்தயம் (Gloden Globe Race)

- ❖ மேற்கு பிரான்சில் உள்ள லெஸ் சேப்லஸ் டிஓலோனே துறைமுகத்திலிருந்து தொடங்கிய வரலாற்று சிறப்புமிக்க கோல்டன் உலகப் பந்தயத்தில் இந்திய கடற்படையின் கடற்படை அலுவலர் தளபதி அபிலாஷ் தாமி பங்கேற்கிறார்.
- ❖ உள்நாட்டிலேயே கட்டப்பட்ட கப்பலான, துரியா எனும் 1950-களில் இருந்த சுகாலி கப்பலை ஒத்த கடற்பயணம் செய்வதற்கான கப்பலுடன் இவர் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்துவார்.
- ❖ இந்தியாவின் புகழ்பெற்ற மாலுமிகளில் ஒருவரும் கீர்த்தி சக்ராவைப் பெற்றவருமான தாமி ஆசியாவிலிருந்து செல்லும் ஒரே பங்கேற்பாளர் ஆவார்.

- ஒரு பெண் மாலுமியுடன் 18 பங்கேற்பாளர்கள் இந்த பந்தயத்தில் உள்ளனர். இந்த பந்தயம் 2019-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் லெஸ் சேப்லஸ் டிஓலோனேயில் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- தளபதி அபிலாஸ் தாமி 2012-13ல் நடைபெற்ற இடைநில்லாத உலகை சுற்றும் கடற் பயணத்தை இந்திய கடற்படை பயணக் கப்பலான மஹ்தேய் கப்பலில் 53,000 கடல் மைல்களை தனி ஒருவனாக கடந்து முடித்த ஒரே இந்தியன் ஆவார்.

***கோல்டன் உலகப் பந்தயம்***

- இந்த கோல்டன் உலகப் பந்தயமானது UK-ன் சர் ராபின் நாக்ஸ் ஜான்ஸ்டன் என்பவரால் நடத்தப்படுகிறது. இந்த போட்டியானது தனிமனிதனாக இடைநில்லாது உலகை சுற்றும் பயணத்தில் உலகில் மேற்கொண்ட முதல் பயணத்தின் 50 வருடங்கள் கழிந்ததை நினைவு கூர்வதற்காக நடத்தப்படுகிறது. இப்பயணம் 1968 -ம் ஆண்டில் இந்தியரால் கட்டப்பட்ட சுகாலி படகில் மேற்கொள்ளப்பட்டது.
- இந்தப் போட்டியின் தனித்துவம் என்னவென்றால் 1968க்குப் பிறகு வடிவமைக்கப்பட்ட கப்பல் மற்றும் தொழில்நுட்பங்கள் இந்த போட்டியில் இடம்பெற இயலாது.
- இதனால் புவி இடங்காட்டி தகவல் அமைப்பு, செயற்கைக் கோள் தொடர்புகள், ஊடுருவல் உதவி மற்றும் பல உபகரணங்கள் இப்போட்டியில் தடை செய்யப்பட்டுள்ளன.

# பொருளாதாரச் செய்திகள்

## APTA உறுப்பினர்களுக்கானக் கட்டணச் சலுகை


- ஜுலை 1, 2018லிருந்து ஆசிய பசிபிக் வர்த்தக ஒப்பந்த உறுப்பினர்களுக்கு (APTA - Asia Pacific Trade Agreement) 3,142 விளைபொருட்களுக்கு கட்டணச் சலுகையை வழங்குவதற்கு இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது.
- ஆசிய பசிபிக் பகுதிகளின் வளர்ந்து வரும் உறுப்பினர் நாடுகளுக்கிடையே கட்டணச் சலுகை பரிமாற்றத்தின் மூலம் வர்த்தகத்தை விரிவடையச் செய்வதற்காக ஆசிய மற்றும் பசிபிக் பகுதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக குழுக்களின் (UN ESCAP - United Nations Economic & Social Commission for Asia & the pacific) முயற்சியே APTA ஆகும்.
- இது ஒரு விருப்ப வர்த்தக ஒப்பந்தமாகும். இதன் கீழ் எந்தெந்த பொருட்கள் மற்றும் எந்த அளவிற்கான கட்டணச் சலுகை ஆகியன யாவும் வர்த்தக பேச்சுவார்த்தை சுற்றின் போது விரிவுப்படுத்தப்படுகின்றன.

## எட்டு முதன்மையான தொழிற்துறைகளின் குறியீடு

- வர்த்தக அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட எட்டு முதன்மையான தொழிற்துறைகளின் குறியீட்டின்படி எட்டு உட்கட்டமைப்பு தொழில் துறைகளின் வளர்ச்சியானது 10 மாத வீழ்ச்சியாக 3.6 % அளவிற்கு மே, 2018-ல் தாழ்ந்துள்ளது.
- இதற்கு கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவின் உற்பத்தியில் ஏற்பட்ட சரிவே ஒரு முக்கிய காரணமாகும்.
- 2017-ம் ஆண்டு ஜுலை மாதம் எட்டு முக்கிய உட்கட்டமைப்பு தொழில்துறைகளின்

குறியீடு 2.9% அளவிற்கு சரிவை சந்தித்தப்பின் ஏற்பட்ட மிகவும் குறைந்த வளர்ச்சி வீதம் இதுவே ஆகும்.

- ஏப்ரல் 2018-ல் பதிவு செய்யப்பட்ட வளர்ச்சி விகிதமானது 4.6% என்ற அதிக அளவில் இருந்தது.




- முக்கியத் தொழில்துறைகளை பொருளாதாரத்தின் முக்கிய அல்லது ஆதார தொழில்துறைகளாக வரையறுக்கலாம்.
- இந்தியாவில் நிலக்கரி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, பெட்ரோலிய சுத்திகரிப்பு பொருட்கள், உரங்கள், எஃகு, சிமெண்ட் மற்றும் மின்சாரம் ஆகிய துறைகளை உள்ளடக்கிய எட்டு முக்கிய தொழில்துறைகள் உள்ளன.
- எட்டு முக்கிய உட்கட்டமைப்பு துறைகள் மொத்த தொழில்துறை உற்பத்திக் குறியீட்டில் 40.27% கொண்டிருக்கின்றன.

## ரவிந்த்ரா தோலக்யா குழு

- மாநில மற்றும் மாவட்ட அளவில் பொருளாதார தகவல்கள் கணக்கீடுகளுக்கான விதிகளை மேம்படுத்துவதற்காக துணை - தேசிய கணக்குகளுக்கான 13 உறுப்பினர்களைக் கொண்டக் குழுவை மத்திய அரசு அமைந்துள்ளது.
- இது தேசியக் கணக்குகள் (அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி கணக்கீடுகளுக்கான அடித்தள ஆண்டை மாற்றியமைப்பதற்கான திட்டமிடுதலின் பின்னணியில் உருவாக்கப்பட்டது.
- இந்த குழு அகமதாபாத்தில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியரான ரவிந்த்ரா H தோலக்யா என்பவரால் தலைமை தாங்கப்படும்.
- மத்திய புள்ளியியல் அமைப்பானது கடைசியாக மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அடித்தள வருடத்தினை ஜனவரி 2015-லிருந்து பழைய அடித்தள வருடமான 2004-2005 - ஐ 2011-2012 ஆக மாற்றியது.
- பொருளாதரத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக புள்ளியியல் மற்றும் திட்டம்

செயல்படுத்துதல் அமைச்சகம் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தொழில்துறை உற்பத்தி எண்ணிக்கைகள் ஆகியவற்றின் கணக்கீடுகளுக்கான அடித்தள வருடத்தை 2011-2012 லிருந்து 2017-2018 மாற்றுவதற்காக திட்டமிட்டுக்கொண்டிருக்கிறது.

# பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## இராணுவ பார்வையாளர்கள் குழுவின் பணித் தலைவர்

- ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ், உருகுவேயின் இராணுவப் படைத் பெருந்தலைவர் ஜோஸ் எலாடியோ அல்கெய்னை இந்தியா மற்றும் பாகிஸ்தானில் உள்ள ஐக்கிய நாடுகளின் இராணுவ பார்வையாளர்கள் குழுவின் பணித் தலைவர் மற்றும் தலைமை பார்வையாளராக நியமித்துள்ளார்.
- சுவீடனின் மேஜர் ஜெனரல் பெர் கஸ்டஃப் லோதினின் இரண்டு வருடப் பணிக்குப் பிறகு ஜோஸ் பதவி ஏற்க உள்ளார்.
- UNMOGIP (UN Military Observer Group in India & Pakistan) ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையினால் தீர்மானத்தின் மூலம் நிறுவப்பட்டது. இது 1949-ல் இருந்து அதன் பணியைத் தொடங்கியது.
- ஜம்மு & காஷ்மீரில், அணு ஆயுதமுடைய இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையேயான போர் நிறுத்த நிலையை கண்காணிப்பது இதன் பணியாக கொடுக்கப்பட்டுள்ளது.
- UNMOGIP-ல் 44 இராணுவ பார்வையாளர்கள், 10 நாடுகளிலிருந்து 25 சர்வதேச பொது பணியாளர்கள் மற்றும் 47 உள்ளூர் பொது ஊழியர்கள் உள்ளனர்.
- இந்த குழுவிற்கு ஐக்கிய நாடுகளின் வழக்கமான வரவு செலவு திட்டதால் நிதி வழங்கப்பட்டுள்ளது.

- - - - - - - - - - - - - - -